கல்குடா கல்வி வலய வளநிலையப் பரீட்சைச் சபை

பயிற்சிப் பரீட்சை கு.பொ.த (இ/த) – 2018 ஆனி

தரம்: 13 (2018)	தவணை: 06	அரசியல் மூலதத்துவம் I	நேரம்: 2மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

01 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமற்ற விடையை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் இலக்கத்தை இடுக.

01. அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரங்களாவன
1. உயர் அதிகாரிகளை தற்துணிவின் படி நியமித்தல்.
2. காங்கிரஸ் சட்டங்களை அமுலாக்கம் செய்தல்.
3. மானிலங்களின் குடியரசு அரசாங்கங்கங்களை பேணி பாதுகாத்தல்.
4. ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்கத் தூதுவருக்கு அறிவித்தல் விடுத்தல்.
5. குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்கல். ( )

02. பிரித்தானியா பிரபுக்கள் சபையானது
1. சாதாரண மசுதா நடைமுறைப்படுத்தப்படுவதை ஒரு வருடம் தாமதப்படுத்தக் கூடியது
2. நீதியமைச்சர் தெரிவு செய்யப்படும் அவையாகவுள்ளது.
3. அமைச்சரவையை கேள்வி கேட்கும் அதிகாரம் கொண்டது.
4. பக்கச்சார்புச் சட்டங்கள் உருவாக காரணமாகவுள்ளது.
5. பெண்களுக்கு உறுப்புரிமையை வழங்கியுள்ளது. ( )

03 மத்தியஸ்தம் என்பது
1. மோதல் தரப்பினரிடையேயான பரிமாற்றம் ஊடகமாக செயற்படும் ஒன்றாகும்.
2. வன்முறையுடனான தீர்வுக்கான பங்களிப்பில் ஒரு மூன்றாந் தரப்பு தலையீடு
3. மோதல் தீர்வினூடாக சமாதான உருவாக்க நோக்கங்களுடன் நெருக்கமான தொடர்புடையதொன்று
4. நடுநிலையை வரவேற்கின்றது.
5 மோதல் தரப்புக்களில் பிரதிநிதிகளை இச்செய்றபாட்டில் நேரடியாக பங்குகொள்ள வேண்டும்.
( )

04. மோதல் என்பது
1. இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்களின் உடன்படிக்கையாகும்.
2. அருமையான வழங்கள் மீது இரண்டுக்கு மேற்பட்ட குழுக்கள் அல்லது தனிநபர்கள் போட்டியிடுவது.
3. வன்முறை கலந்ததாக மட்டுமே இருந்தது.
4. பல்வேறுபட்ட தனித்துவங்கள் மற்றும் மனப்பாங்கு மாற்றங்களால் ஆட்களுக்கிடையேயான எதிர்ப்பு
5. பற்றாக்குறையான அந்தஸ்த்து அதிகாரம் மற்றும் வழங்களுக்கான போராட்டமாகும். ( )

05. ஐக்கிய நாடுகள் தாபனத்தின் நோக்கங்களாவன
1. மூன்றாம் உலக யுத்தத்தை தடுத்தல்.
2. சர்வதேச சமாதானத்தையும், பாதுகாப்பையும் பேணல்
3. உலகில் ஏற்படக் கூடிய யுத்தங்களை ஊக்குவித்தல்.
4. இணங்களுக்கிடையே நட்புறவை பேணல்.
5. மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்தல். ( )

06. சர்வதேச சங்கத்தின் தோல்விக்கான காரணங்களாவன
1. உலக வல்லரசு தலைவர்களிடையே ஒற்றுமையின்மை நிலவியமை.
2. இச்சங்கத்தை உருவாக்குவதில் முன்னின்ற ஐக்கிய அமெரிக்கா அங்கம் பெறாமை
3. அங்கத்துவ நாடுகள் உள்நாட்டு பாதுகாப்பிற்கு ஆயுதங்களையும், இராணுவத்தையும் பெருக்கியமை.

www.keou.lk

4. சங்கத்தின் ஆணைகளை சில நாடுகள் மீறும் போக்கு நிலவியமை.
5. ஐக்கிய நாடுகள் தாபனம் உருவாகியமை. ( )

07. உள்ளூராட்சி மன்றங்களின் நோக்கங்களாவன
1. மக்களின் கல்வியை விருத்தி செய்தல்.
2. மத்திய மாகாண ஆட்சியிலிருந்து முற்று முழுதான சுயாதனத்தை பேணிவருதல்.
3. தேசிய அரசியலில் பங்குகொள்வதற்கான அரசியல் பயிற்சியை பெற்றுக்கொடுத்தல்.
4. அடிமட்ட ஜனநாயக அரசியல் நிறுவனமாக கருமமாற்றல்.
5. நல்ல மக்களை பிரஜைகளை உருவாக்க உதவுவது. ( )

08. உள்ளூராட்சி அரசாங்களாவன
1. அரசாட்சியை செயல்திறனற்றதாக்குபவை.
2. மக்களின் தேவைகளை விரைவாக பூர்த்தி செய்வதில் முக்கிய பங்காற்றுகின்றன.
3. நல்லாட்சியினை பலப்படுத்துவதன் ஊடாக தேசிய மட்டத்திலும் அவற்றினை பலப்படுத்த எத்தனிப்பவை
4. பிரதேச அரசாங்கங்கள் என அழைக்கப்படுகின்றன.
5. தேசிய அரசாங்கத்தின் ஒரு பகுதியாக உள்ளமை. ( )

09. 1978ம் ஆண்டு அரசியலமைப்பின் அரசாங்க முறையில்
1. நிறைவேற்றுத்துறை சட்ட அங்கீகாரம் பெற்றது.
2. வரையறுப்பற்ற பதவிக்காலத்தை நிறைவேற்றுதுறையான ஜனாதிபதி கொண்டுள்ளார்
3. கபினட் குற்ற பிரேரணை ஒன்றின் நிறைவேற்றத்தால் பதவி விலகக் கூடியது.
4. எதிர்கட்சி முறை நடைமுறையில் அனுமதிக்கப்படுகின்றது.
5. மக்கள் இறைமை முதுமைப்படுத்தப்படுகின்றது. ( )

10. இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதி முறையானது
1. தனிநபர் சர்வாதிகாரத்திற்கு வழிவிடும் போக்கு
2. வினைத்திறன் கொண்ட ஆட்சிமுறை
3. உலக அரசியலுக்கு தலைமைப்பொறுப்பை ஏற்றதன்று
4. நீட்கப்பட முடியாதது.
5. தனிநபரான ஜனாதிபதியே பொறுப்புடையவர். ( )

11. நகர சபைகளின் பணிகளாவன
1. பொது மக்களுக்கு சுமையாகும் வகையில் வரிவிதித்தல்.
2. சபைக்கு தேவையான எல்லா உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் நியமித்தல்.
3. அனர்த்தங்களுக்கு நிவாரணம் அழித்தல்.
4. நீர் விநியோகம் சந்தை போன்றவற்றை உருவாக்கி பராமரித்தல்.
5. பொது மக்களுக்கு தெந்தரவு தரும் விடயங்களை அகற்றுதல். ( )

12. இலங்கையில் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில்
1. விருப்பத்தெரிவு தெரிவு வாக்குமுறையும் உண்டு
2. கட்சித் தலைமையின் ஆதிக்கம் அதிகரித்திருக்கும்.
3. பல அங்கத்தவர் தேர்தல் தொகுதி காணப்படும்.
4. வெற்றிடங்களை நிரப்பும் போது பட்டியலில் எஞ்சியிருப்பவர்கள் ஒருவரை நியமித்தல்.
5. ஜனநாயகத்தன்மையற்றதாக இருக்கிறது. ( )

13. 1978ம் ஆண்டு அரசியலமைப்பில் மேல்முறையீட்டு நீதிமன்றமானது
1. 63 வயது ஓய்வுபெறும் நீதிபதிகளை உடையது.
2. ஆட்கொணர் எழுத்தானைகளை வழங்குகின்றது.
3. பாராளுமன்ற ஆட்சேபனை மனுக்களை விசாரணை செய்கின்றது.
4. ஜனாதிபதி தேர்தல் தொடரபான ஆட்சேபனை மனுக்களை விசாரணை செய்கின்றது.
5. பாராளுமன்ற விவாதங்களை பதிவு செய்கிறது. ( )

14. முதலாம் குடியரசு அரசியலமைப்பில் தேசிய அரசுத் தேவையானது
1. வலுவேறாக்கத்தினை நிலைமாற்றியது.
2. பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவரையே தலைவராகக் கொண்டிருந்தது.
3. அனைத்து வகையான சட்டங்களை இயற்றும் வல்லமை கொண்டிருந்தது.
4. பிரதமர் தெரிவாகும் சபையாக இருந்தது.
5. அரசாங்க கொள்கை தோல்வியுறுவதால் கலைக்கக் கூடியது. ( )

www.ikeou.lk

15. சோல்பரி அரசியலமைப்பில் பிரதமரானவர்
1. பிரதமர் தெரிவில் செனட் சபை செல்வாக்கற்றது.
2. தலைமை நிர்வாகி
3. மந்திரி சபையினை கூட்டவும் கலைக்கவும் அதிகாரமிக்கவர்
4. கபினட்டின் கூட்டுப் பொறுப்பிலிருந்து விடுபட்டவர்
5. நிர்வாக பொறுப்புக்குட்பட்டவர் ( )

16. டொனமூர் சீர்திருத்தத்தின் நிர்வாக குழுக்களின் அணிகளாவன
1. குழுக்களின் செயற்பாட்டுக்கு செலவுகளை செப்பனிடுதல்.
2. நிர்வாக குழுக்களின் பணிக்கு பொறுப்பான இலாகாக்களை முறையாக நிர்வகித்தல்.
3. மந்திரிசபை மீது நம்பிக்கையற்ற தீர்மானத்தை நிறைவேற்றி கதைத்தல்.
4. உறுப்பினர்களுக்கு அரசியல் நிர்வாக பயிற்சி வழங்கல்.
5. குறைகளின் தேவையை அடையாளம் காணுதல். ( )

17. மனிங் டிவைன்செயர் சீர்திருத்தத்தின் நிதிக்குழுவானது
1. உத்தியோக பற்றவர்களின் பெரும்பான்மை விருப்பை பெற்றவராக தலைவரால் ஏற்றுக்கொண்டது.
2. வருமான கட்டுப்பாட்டாளரை உருவாக்கியது.
3. நிதி தொடர்பான விடங்களில் ஆலோசனை கூறவும் ஆராயவும் அதிகாரமுற்றது.
4. நிதியை கட்டுப்படுத்தும் அதிகாரமிக்கது.
5. காலணித்துவ அதிகாரிகளின் நிதி நடவடிக்கைகளை ஓரளவு கட்டுப்படுத்தும் வல்லமையுற்றிருந்தது. ( )

18. மனிங் அரசியல் சீர்திருத்தத்தில்
1. சட்டசபையில் உத்தியோக சார்பற்றவர்களின் 11 பேர் பிரதேச ரீதியாக தெரிவானவர்கள்.
2. சட்டசபையின் தேசாதிபதியை தலைமையாக கொண்டு செயற்பட்டது.
3. உத்தியோக சார்புள்ளவர்களையே தொடர்ந்தும் சட்ட நிர்வாக சபையில் இடம்பெற வைத்தது.
4. சங்கங்களுக்கும் சட்டசபையில் அங்கத்துவத்தை அளித்தது.
5. தேசிய காங்கிரசின் கோரிக்கைகளையும் பூரணமாக நிறைவேற்றுவதில் பின்வாங்கியது.( )

19. சுவிற்சலாந்தின் தேசிய சபையானது
1. நாடு முழுவதும் நடைபெறும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களை உடையது.
2. நிர்வாகதுறையால் கலைக்கப்பட முடியாதது.
3. அவசரகால நிலையில் கலைக்கப்படக் கூடியது.
4. மன்றங்களுக்கு அசமப் பிரதிநிதித்துவத்தை வழங்கியுள்ளது.
5. ஜனநாயகத் தன்மையை பேணிப் பாதுகாக்கின்றது. ( )

20. இந்திய பிரதமரானவர்
1. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற கட்சியின் தலைவர்
2. சமமானவர்களுள் முதன்மையானவரன்று.
3. கபினட்டினை தெரிவு செய்பவர்.
4. ஜனாதிபதியின் ஆலோசகராக பணிபுரிபவர்
5. வெளிநாடுகளுடன் உடன்படிக்கை மேற்கொள்பவர். ( )

21. பிரான்சிய ஜனாதிபதியின் அதிகாரங்களாவன
1. பாராளுமன்றின் இருசபைகளுக்கும் செய்திகளை அனுப்புபவர்.
2. மசோதாக்களுக்கு ஒப்பமிட்டு சட்டமாக்குபவர்
3. செனட் சபையை எவ்வகையிலும் கலைக்க முடியாதிருத்தல்.
4. முப்படைகளின் தளபதிகளாக பிரதமரை நியமித்தல்.
5. வெளிநாட்டு தூதுவர்களை நியமித்தல். ( )

22. ஐக்கிய அமெரிக்க அரசாங்க முறையில்
1. அமைச்சரவை உறுப்பினர்கள் காங்கிரஸ் உறுப்பினர்களாதல்.
2. சட்டவாட்சியின் மேலான்மை பேணப்படுகின்றது.
3. நீதிப் புனராய்வு அதிகாரம் முற்றதாக நீதித்தறை செயற்படுகின்றது.
4. நிர்வாக துறையானது சட்டத்துறைக்கு ஆட்சேர்ப்பு செய்யுமொன்றன்று
5. நிறைவேற்றுத்துறையை பிரதான நிர்வாகமுள்ளது. ( )

23. மோதல் என்பது
1. அருமையான வழங்களை அடைய நினைக்கும் ஒரு குழுவின் போராட்டமாகும்.
2. அதிகாரம் கைப்பற்றுவதில் தேசங்கள் ஈடுபடல்

www.kesu.lk

3. ஒரே வகையான அடிமையுற்ற வளங்களை அடைவதற்கு ஏக காலத்தில் இருதரப்புக்கள் போட்டியிடும் சமூக நிலை.
4. வன்முறையான எதிர்ப்படுத்தல் போராட்டம் அல்லது உள ரீதியில் நிகழும் போராட்டமாகம்.
5. தம்மிடையே ஒவ்வாத இலக்குகளினை கொண்டவர்கள் அவற்றை அடைந்துகொள்ளும் நோக்கில் செயற்படுதல். ( )

24. பொதுக் கொள்கை என்பது
1. பொது மக்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதானதொன்று
2. ஒரு நாட்டின் அனைத்து அரசாங்கங்களினது செயற்பாடுகளின் சாரம்சமாகும்.
3. தெளிவாக வரையறுக்கப்பட்டதாக காணப்படும்.
4. பல காரணிகளின் செல்வாக்கின் விளைவாகும்.
5. அரசாங்கத்தின் தற்கால எதிர்கால நடத்தைகளின் வெளிப்பாடாகும். ( )

25. கட்சி முறைகளுள் அடங்காததது
1. தனிக்கட்சி / ஆதிக்கமுள்ள தனிக்கட்சி முறை
2. இரு கட்சி முறை
3. பல கட்சி முறை
4. ஆதிக்கமுள்ள இரு கட்சிமுறை
5. விழிப்புக் கட்சி முறை ( )

26 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு மிகச் சரியான சேர்மானத் தொகுதியை தெரிவு செய்க.

26. கிரேக்க நகர அரசுகள்
A நேரடி ஜனநாயகத்தை தாயகமாக கொண்டது.
B நகரங்களை மையமாகக் கொண்டு செயற்பட்டன.
C. மதம் முக்கியம் பெற்று காணப்பட்டது.
D பெண்கள், அடிமைகள், சிறுவர்கள் பிரஜைகளாக கணிக்கப்படவில்லை.
E அரசறிவியல் கற்கைக்கு முதல் முதலில் தூபமிட்டன.
1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

27. தலையிடா அரசு முறையானது
A அரசியல் நடவடிக்கைகளில் பொருளாதார தாக்கத்தினை இல்லாதொழிப்பது
B யோன் லெக்கினால் ஒழுங்குபட்ட அரசியல் பகுதியைக் கொண்டிருந்தது.
C. அரசின் தலையீடற்ற சந்தை முறையை வேண்டியது.
D அரசை சட்டம் ஒழுங்கை பேணுவதுடன் சுருங்கியிருந்தது.
E பொருளாதார நடவடிக்கையிலிருந்து முற்றிலும் விலகியிருக்கின்றது.
1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

28. தேசமானது
A அரசின்றி இருப்புக் கொள்ளக் கூடியது
B எல்லா தேசங்களும் அரசுகளைக் கொண்டது.
C. புரிந்துகொள்ள முடியாத ஓர் உணர்வின் மூலம் கட்டுண்ட மக்கள் குழுவாகும்.
D எல்லைகளன்று செயற்படும்
E அரசியல் ரீதியல் சுதந்திரமானது.
1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

29. அரசு பற்றிய தெய்வீக உரிமைக் கோட்பாட்டில்
A பரம்பரை ஆட்சி காணப்படும்
B அரச நிர்வாக கடவுளால் மேற்கொள்ளப்படுகின்றது
C. சமூதாயத்தில் மன்னன் கடவுளுக்குச் சொந்தம்.
D பாராளுமன்றில் சட்டத்தின்படி உலகில் நிறுவனங்கள் நிருவகிக்கப்பட்டன.
E மிகவும் பழமைமிக்கது
1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

30. அரசு பற்றிய கொச்சின் சமுதாய ஒப்பந்தத்தில்
A இயற்கை நிலையில் மனிதன் சுயநலமிக்கவன்
B விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் தனது நடவடிக்கையை நிர்ணயம் செய்வதே அரச சட்டம்.

www.kedu.lk

C. தனியாளுக்கே மக்கள் கீழ்படிந்து நடந்தனர்.
D தனிமனிதனின் ஆணையே சட்டம்.
E மன்னண் தனது செயற்பாடு தொடர்பில் மக்களுக்கு பொறுப்புச் சொல்ல கடமைப்பட்டவன்.

1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

31. அரசு பற்றிய தாராள ஜனநாயக கோட்பாட்டில்
A சமூக நலன் பேணும் கருவியாக அரசின் செயற்பாடு
B மக்களின் சேவகன் அரசு
C. அரசு நிலையான தாபனம்
D கூட்டு உடமைவாதம் நடைமுறையில் இருக்கும்.
E மக்களின் இறைமையின் உறைவிடமாக்குகிறது.

1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

32. அரசு பற்றிய மாக்ச கோட்பாட்டில்
A அரச வர்க்கக் கருவியாகும்.
B தாராளவாதத்திற்கு முரனானது.
C. சொத்தின் ஆதிக்க போக்கினால் பிளவுண்ட சமுதாயத்தில் அரசு அஸ்தமித்தது.
D வர்க்கமின்றி அரசு இல்லை
E அரசு மனித வாழ்விற்கு அவசியமான கருவியன்று.

1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

33. அரசு பற்றிய பாசிச கோட்பாட்டில்
A மக்களுக்காகவே அரசன்றி அரசுக்காக மக்களல்ல
B அரசுக்காக தனிநபர் தம்முயிரை தியாகம் செய்ய வேண்டும்.
C. அரசானது வரலாற்றில் ஒரு கூட்டத்தினரிடம் பெற்றது.
D அரசின் அதிகாரமே மேலோங்கிக் காணப்படும்.
E அரசுதான் எல்லை. அரசுக்காகவே மனிதன்

1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

34. அரசாங்கத்தின் பணிகளாவன
A அரசியல் சுதந்திரத்தை பாதுகாத்தல்
B தேசிய அரசியல் சித்தான்தங்களை புறந்தள்ளுதல்.
C. மோதல் முகாமையும் மோதல் சிக்களும்.
D நல்லாட்சியை மேற்கொள்ளல்
E பொது நலனை மேம்படுத்துதல்.

1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

35. உள்ளக முரண்பாடு தோன்றுவதற்கான காரணிகளாவன
A கட்டமைப்பு சார் காரணிகள்
B பொருளாதார சமூக காரணிகள்
C. அரசியல் காரணிகள்
D சர்வதேசத்திற்கான சமாதான வெளிப்பாட்டு காரணிகள்
E கலாசார காரணிகள்

1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

36. அமுக்கக் குழுக்களுக்கு வேறு பதங்களைக் கொண்ட தொகுதியாக அமைவது
A ஆசைக் குழுக்கள்
B நியாய பிரச்சாரக் குழுக்கள்
C. ஜனநாயக கட்சிகள்.
D அழுத்தக் குழுக்கள்
E அபிலாசைகளை அடைந்துகொள்ளும் குழு

1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

www.ikeu.lk

37. பெண்ணியல்வாத இயக்கத்தில் பிரதான துறைகளாவன

A அறநெறி சார் பெண்ணிமைவாதம்
B தாராள்மை பெண்ணியல்வாதம்
C. சமவுடமைப் பெண்ணியல்வாதம்.
D தீவிர (றெடிகல்) பெண்ணியல்வாதம்
E பின்காலனித்துவ பெண்ணியல்வாதம்.

1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

38. அரசியல் பாடப்பரப்பில் உள்ளீடுகளாவன

A பொது முகாமைத்துவம்
B அரசியல் நடத்தை
C. அரசியல் சமூகமயமாக்கம்
D தனியார் கம்பனிகள் முகாமை
E அரசியல் நவீனத்துவம்

1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

39. பாசிச வாதத்தில் அடங்குபவை

A இனத்தின் சிருஷ்டியே அரசாகும்.
B அரசு சர்வவல்லமை பொருந்திய தாபனமாகும்.
C. அரசு நிகரற்ற தாபனமாகும்
D அரசு அரசுக்காகவுள்ளது
E பொதுச் சித்தமே அரசு

1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

40. ஜனநாயகப் பண்புகளில் அடங்குபவை

A சமத்துவம்
B யுத்த நிலை
C. உரிமை
D பொதுஜன அபிப்பிராயம்
E மக்கள் இறைமை.

1. ABCD 2. BCDE 3. ACDE 4. ABDE 5. ABCE ( )

40 தொடக்கம் 50 வரையிலான வினக்களுக்கு மிகப் பொருத்தமான சேர்மானத்தை தெரிவு செய்க. கீழே தரப்பட்ட கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 41, 42 வினாக்களுக்கு விடை தருக.

A அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமற்றது
B அது நாட்டு சரித்திரத்தின் தொடர்ச்சி
C. மரபுகளும் வழக்காறுகளுக்கும் மதிப்பளிக்கின்றது.
D எளிதான வகையில் மாற்றங்களுக்கு உட்படும்.
E இறுக்கமான சட்ட விதிகளையுடையது.
F பொருள்மிகு அரசியலமைப்பானதன்று
G. மக்களின் உணர்வுளுக்கு மதிப்பளிக்கும்
H. நெகிழ்வுத்தன்மை உற்றது.
I. காலத்தின் தேவைக்கு நெகிழ்வு கொடுக்காது
J. சர்வாதிகாரிகளின் தொழிற்பாட்டை தடைபோடக் கூடியது

41. வரையப்படாத அரசியலமைப்பின் தன்மைகளாவன

1. ABCH 2. BCDF 3. EFGH 4. DEFG 5. ACDF ( )

42. வரையப்படட்ட அரசியலமைப்பின் தன்மைகளாவன

1. ABCD 2. BCDF 3. CDEF 4. GHIJ 5. BEIJ ( )

www.lkedu.lk

கீழே தரப்பட்ட கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 43, 44 வினாக்களுக்கு விடை தருக.

A இறைமை ஏனைய குழுக்களுக்கு இல்லை.
B தேசத்தின் இறைமை ஒன்றாகக் குவிந்துள்ளமை
C. இரண்டு சட்டசபைகளைக் கொண்டது.
D அதிகாரப் பங்கீடு
E தேசப்பற்று கூறுபடாது
F சிக்கனமிக்க அமைப்பு
G. மத்தியின் கீழ் பல மானிலங்களை கொண்டது
H. அதிக நிர்வாக செலவுமிக்கது.

43. ஒற்றையாட்சியில் அடங்குபவை.
1. ABCE 2. BCEF 3. DEFG 4. ABEF 5. CDEF ( )

44. சமஷ்டிஆட்சியில் அடங்குபவை
1. ABCD 2. BCDE 3. CDEF 4. DEFE 5. CDGH ( )

கீழே தரப்பட்ட கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 45, 46 வினாக்களுக்கு விடை தருக.

A அரசியல் தத்துவங்களை விளக்குகின்றது
B புள்ளி விபர ரீதியான அரசியல் பிரச்சினைகளை ஆராயப்படுகின்றது.
C. மனிதன் அரசு பற்றி ஆய்வு செய்கின்றது
D கலாநிதி கலூப், சார்ளஸ் மெரியம், ஹெரடோர், கொஸ்நெல் இவ்வணுகுமுறை பற்றி கூறியுள்ளனர்.
E மிகவும் பழமைவாய்ந்த அணுகுமுறை
F தேர்தல் நடத்தை, பொது ஜன அபிப்பிராயத்திற்கு இவ்வணுகுமுறை பயன்படுகின்றது.
G. உண்மைத் தன்மைகொண்ட முடிவுகளை எடுக்கின்றது.
H. அகநிலைசாரா குறைநிலை முடிவுகளை பெற உதவுகின்றது.

45. தத்துவார்த்த அணுகுமுறையில் அடங்குபவை
1. ABCD 2. ACEG 3. BCDE 4. DEFG 5. CDEF ( )

46. புள்ளி விபர முறையில் அடங்குபவை
1. BDFH 2. ABCD 3. BCDF 4. DEFG 5. EFGH ( )

கீழே தரப்பட்ட கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 47, 48 வினாக்களுக்கு விடை தருக.

A ஆறு பிரிவுகளைக் கொண்டது
B நிரந்தர நாடுகள் ஐந்து வீற்று அதிகாரமிக்கது
C. 8 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.
D தலைமையகம் நோபாள நாட்டில் அமைந்துள்ளது
E சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பை முன்னெடுத்துச் செல்கின்றது.
F 1985 பங்களாதேஸ் நாட்டின் டாக்காவில் அமைந்துள்ளது.
G. மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் சுதந்திரத்திற்கு மதிப்பளிக்கும் நிலை அதிகரித்தல்
H. விளையாட்டுப் போட்டி இரண்டு வருடங்களுக்கொருமுறை இடம்பெறுகின்றது.

47. ஐக்கியநாடுகள் சபையில் உள்ளடங்கப்படுபவை
1. ABCD 2. BCDE 3. ABEG 4. EFGH 5. BCFH ( )

48. சார்க் அமைப்பில் அடங்குபவை
1. ABCD 2. BCDE 3. ABEG 4. EFGH 5. CDFH ( )

www.ikedu.lk

கீழே தரப்பட்ட கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 49, 50 வினாக்களுக்கு விடை தருக.

A அரிஸ்டோட்டில்
B மகாத்மாகாந்தி
C. ஜோன்லொக்
D மைக்கல் ஹெரலோட்
E மாக்ஸ்
F சார்ள்ஸ் டெய்லர்
G. இமானுவல் கான்
H. றொனோல்ட் டிவோ ஹிம்.

49. சமத்துவம் தொடர்பான மத்தியகால மற்றும் தற்கால அரசியல் தத்துவியலாளர்கள்
1. ABCD 2. BCDE 3. CDEF 4. ACEG 5. DEFH ( )

50. சமத்துவம் தொடர்பான சமகால அரசியல் தத்துவியலாளர்கள்
1. ABCD 2. BCDE 3. CDEF 4. ABEF 5. BDFH ( )

(50x2=100 புள்ளிகள்)

www.lkedu.lk